# ஜாலான் யாப் ஆ லோய் பெயர் மாற்றம் செய்யப்படாது




## கோலாலம்பூர் மாநகர் மன்றம் விளக்கம்

கோலாலம்பூர், ஆக. 27-
தலைநகரிலுள்ள ஜாலான் யாப் ஆ லோய், ஜாலான் பாலஸ்தீனாகப் பெயர் மாற்றம் செய்யப்படும் என சமூக வலைத்தளங்களில் வெளியான தகவலை கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று மறுத்தது.

இந்தச் செய்தியில் சிறிதும் உண்மை இல்லை. ஜாலான் யாப் ஆ லோய் தொடர்ந்து நிலைநிறுத்தப்படும். அதன் பெயரில் எந்தவொரு மாற்றமும் ஏற்படாது என கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்.

ஜாலான் ராஜா லாவுட் 1ஆக இருந்த அச்சாலை கடந்த 2020ஆம் ஆண்டு கூட்டரசுப் பிரதேச அமைச்சராக இருந்த டான்ஸ்ரீ அனுவார் மூசாவின் உத்தரவின் பேரில் ஜாலான் பாலஸ்தீனாக மாற்றப்பட்டது. இவ்விவகாரம் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வரும் செய்தி பொய்யானது. அதில் சிறிதும் உண்மை இல்லை என்று அவர் கூறினார்.

ஜாலான் ராஜா லாவுட் 1 ஜாலான் பாலஸ்தீனாக மாற்றப்பட்டபோது அது 80 மீட்டர் வரை மட்டுமே இருக்கும் எனக் கூறப்பட்டது. மாறாக ஜாலான் ராஜா லாவுட் முழுவதும் அப்பெயரைக் கொண்டிருக்காது என கடந்த 26.9.2020ஆம் தேதி கோலாலம்பூர் மாநகர் மன்றம் தனது ஃபேஸ்புக்கில் குறிப்பிட்டிருந்தது.